கல்முனை புகவம்

அக்டோபர்: 1988 (றபியுல் அவ்வல் - ஹிஜ்ரி 1409) 15

காணிக்கை: இலவசம். (நிஜமாகவே!) விலை குறிப்பிட்டால் மட்டும் அனுப்பவா போகிறீர்கள்? ம்ஹும்!

ஆசிரியரின்,
பரிமாற்றம்.

வடகிழக்கில் நாள் தோறும் குண்டு. விழுமுயிர்க்கு ஒரு கணக்கா உண்டு? விடுதலைப்புலி சுடும் வேட்டை, விழுங்கி விடும் நாட்டை வெளியேறும்(?) அமைதிப் படை என்று? தென்திசையிலும் துப்பாக்கி வேட்டு. இணையாக மானுடமது கேட்டு. திசையெல்லாம் ரத்தம் பார். திரும்புமிடம் சத்தம் வீர்! துட்டகைமுனுக்கும் உரிமைப் பாட்டு. புதிதாயொரு புரட்சி துளிர் விட்டு பூத்து வருகிறது புதுப் பெயரிட்டு. புல்புல்கள் வான் மேவி, பரவி நெருப்பு நாகாவி, போராடத் தாம் வரும் புறப்பட்டு. மனிதர் சகலருமறிக இத்தால்! மாதத்தில் நாலைந்து ஹர்த்தால், மண் சமரில் இறந்தாலே மறுயுகமது பிறந்தாலே மண்ணிலில்லை மானுடம் போர்ப், பித்தால்! பல்கலைக் கழகமெல்லாம் பூட்டு. பள்ளியிலும் கிழிக்கப்படும் நோட்டு. படிக்க வந்த பிள்ளைகளின், பதறும் உயிர் இல்லை யெனின், படிபபெதற்கு ஊன்றுக! கை நாட்டு. அழுகின்ற அகதி குரல் கேட்டு அடைத்து விடு காதில் விரல் ஒட்டு! அடுத்து வரும் ‘எலக்ஷனில்’ குதி. அடுக்கி விடு ‘கலக்ஷனில்’ சுதி. ஆலாய்ப் பற! ‘பார்ளிமெந்துச்’ சீட்டு. அரசாங்கம் ஊழியர் ஆர்ப்பாட்டம். அரசாங்க நிர்வாகமும் மூட்டம் அரசாங்கம் கலையாது? அதிகாரம் நிலையாது. அழியாதா அக்கிரமக் கூட்டம்? பாராளும் மந்திரிகள் சேர்ந்து, பாராளும் உரிமைகள் தேர்ந்து, போராடும் இனத்திற்கும், பாராளும் வகை செய்[illegible]! ஓடும் பிரச்சினைகள் தீர்ந்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூது: இலக்கியத் தூதே இலட்சியத் தூது, அளிப்பு: புகவம் வெளியீட்டு வாரியம் ஆசிரியர்: ஆர். எம். நௌஸாத்
நிர்வாக ஆசிரியர்: எஸ். எம். எம் ருபீக், அலுவல்கள்: 503, பிரதான வீதி, சாய்ந்தமருது. 01. (படைப்புகளுக்கு
படைத்தோரே உரிமை கோருவர், பத்திரிகையல்ல.) பதிவு: பைன் ஆர்ட் பிறின்டர்ஸ் கல்முனை!

தூது 13ல் முன்னறிவிக்கப்பட்ட,
வீ. ஆனந்தனின்,

## புதிய பரதீஸ்!

ஆதி பிதா ஆதம் மக்கள்
ஆபேலும் காயினும்
போரிட்டு வீழ்ந்த கதை
புவியில் இன்னும் தொடர்கிறதா?
யாரிட்ட சாபமிது?
அண்ணனும் தம்பியும்
போரிட்டு மாள்தல் எனும்
புன்மை மிகு கதை தொடரல்
தாயும் தந்தையும்
தவறிழைத்த காரணத்தால்
ஏடன் தோட்டத்தை
இழந்த பரம்பரையே—
உங்களுக்குள் நீங்களே
குத்தி வெட்டிக் கொலை புரிந்து
சத்தியத்தைச் சாகடித்து உங்கள்
சரித்திரத்தை தொலைத்திடுவீர்
சர்ப்பத்தின் சூழ்ச்சிதனை அறியாள்
கர்ப்பத்தில் இருந்த காரணத்தினாலே
சாத்தான் செய்யும் சதியறியாமல்
வில் பிடித்துப் போர் புரிந்து
வீணே மடிகின்றீர்?
போர் வெறியறியா புதிய பரதீஸை
ஆக்கும் பணியில் அணி திரள்வீர்
என்றிருந்தோம்.
சாக்காடாய் வெறும் சவக்குழியாய்
நாட்டை ஆக்கத் துடிக்கும் உங்கள்
அறியாமை ஈதென்னே—

பாலமுனை பாறூக்கின்,

புண்ணிய பூமி—?
அந்நிய பூமி...?

புண்ணிய பூமியாமே—
புறப்படச் செய்து
விட்டார்கள்—
எங்களை
எங்கள் வயல்
நிலங்களிலிருந்து -
மணிஒலி செல்லும்
தூரம் வரையும்
புண்ணிய பூமி
இந்தத் தீவே
அந்நிய பூமியாய்
ஆகிக் கொண்டிருக்கையில்
புண்ணிய பூமி—?
புனித நகராக்கல்—?
இப்போதும்
எந்தச் சீதையை
இந்த மண்ணில்
மறைத்து வைத்தனரோ?
அவ்வப்போது
எரிந்து கொள்கிறது
இந்தத் தீவு
கொளுத்திப் பார்ப்பது
அனுமான்கள்தானு—?
இன்னொரு தோற்றமாய்
இராமன் இராவணன்
இருக்கலாம் தானே;

இருப்பார்களென்ருல்—?
இராவணு!
மறைத்து வைத்ததை
எடுத்துக் கொடு நீ
எங்கள் புழுதி படிந்த
பூமியை விடு நீ
இராமா!
அனுமான்களை
அழைத்துக் கொள் அப்பா

ஓட்டமாவடி அஷ்ரபின்,
என்னைப் பற்றிய கவிதை!

ரொம்ப நாளாச்சு.
ஒரு கவிதை எழுதி.
நடப்பதை எழுதலாம்
என்ருல் –
நெஞ்சில்
நடப்பதை எழுதலாம்
என்ருல்—
சில வேளை...
நான் பின்வருமாறு
ஆக்கப்படலாம்,
அரச விரோதியாக
அல்லது
'அட்ராஸ்' இல்லாமல்.

எனவே -
என்னைப் பற்றி
எழுதலாம்.

நேற்றும்
முந்த நாளும்
அதற்கு முதல் நாளும்
ஆங்காங்கு
என்னைப் பற்றியும்
கதைத்திருக்கிருர்கள்.
வேறு வேலை
இல்லாதவர்கள்,
இப்போதும்
அது தொடரலாம்,
நாளையும்
நிச்சயம் தொடரும்.

ஆகவே
ஒரு முடிவுக்கு வரலாம்.
வேண்டாம்.

> கவிதை போட்டி முடிவுகளும்
> பரிசில் கவிதைகளும் அடுத்த
> தூது ஆண்டு மலரில்!

கவி இந்தா உலைவனின்,
இன்னலில்லாஹி......

தேசத்துப் பூந்தோட்டத்தை
ரணமாக்கும் மானுடம்கள்...
'சாம்' பரான ஏவுகணை
உழுததால்
எரியும் ராச்சியங்கள்.
பெருக்கெடுத்தோடும் இந்த
இரத்த 'ஷம் ஷம்'மை
மறித்துக் கட்ட
எங்கே நம் ஹாஜருக்கள்?
இந்த 'கர்பலா' கான
எங்கே நம் ஹுஸைனூர்கள்?

சமூகப் பிரஜைகளுக்காக
எனது பேனு
பெயர்களை எழுதாமல்
'மையித்துகள்' என்றே
எழுதுகிறது.
நாளைய விடியல் வரையும்
இதழ்களை ஈரமாக்குங்கள்.
அடிக்கடி உச்சரிப்பீர்கள்.
'இன்னலில்லாஹி வ இன்ன
இலைஹி ராஜிஊன்......?

## காதோரம்!

ரொம்ப சந்தோஷமாயிருக்கும் உங்களுக்கு! இம்முறை தூது இலவசமாச்சே! காசி மிஞ்சிவிடவில்லை எம்மிடம். எதிர் காலத்தில் தூது நிறுத்தப்பட்டால் அதற்கான முழுப் பொறுப்புக்கும் ஓசி வாசகரே உரிமை கோருதல் வேண்டும் என்பதற்கான ஒரு பதிவு இது! எமக்கு முகமே தெரியாத கவிஞர் ஏ. இக்பால் (தர்ஹாடவுன்) தினகரன் 23 அக். 87ல் எழுதியவை இவை:- 'வாசகரின் ஆதரவின்மையால் தமிழ்நாட்டில் 'நடை' என்ற ஏட்டை நிறுத்திவிட்டனர். அவ்வாறு தூதும் நின்று விடாது வாசகர்கள் ஆதரவு தர வேண்டும்.' ஹ்ம்! இக்கவிஞரின் வார்த்தைக்காவது மதிப்புத் தரக் கூடாதோ? அட்லீஸ்ட். முத்திரைச் செலவாவது ?

இலங்கையுடன் மின்சாரம் கோபித்திருந்த தால் தூதின் 15ம் பிரசவம் சற்றுத் தாமதமாக நிகழ்ந்ததை மனசில் வைத்துக் கொள்ளுங்கள்.

மற்றது - கடந்த 16 - 10 - 88ல் கல்முனை புகவம் 'புதுச் சுவர்' சஞ்சிகையின் விமர்சன / அறிமுக விழாவை நடத்தியது. எம். ஏ. நுஃமான், வீ. ஆனந்தன், சண்முகம் சிவலிங்கம், பாஸில் கல்லூரன், ருபீக் ஆகியோர் உரைகள் நிகழ்த்தினர்...

இனி - இன்ஸா அல்லாஹ், அடுத்த ஏப்ரலில் 'தூது ஆருண்டுப் பூர்த்திமலர் (நிசமாகவே) பெரியளவில் வரும் அது ஓசியல் கிடைக்காது. உங்கள் கவிதைகளை கட்டாயம் அனுப்புங்கள். சரி. ஆண்டுமலரில் சந்திப்போமே! பேச அநேகம் உண்டு!

எம். ஆர். சுமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. எம். எம். நவீரின்,
1988 - 03 - 31
சில பதிவுகள்!

காணமல் போகும்
கிராமங்களில்
கணக்கைப் பதித்தது
மற்றுமொரு ஊர்!
துப்பாக்கி நாதஸ்வரம்
நாயணம் வைத்தபோது
கபறுக் குழிகள்
உயிர்த்து எழுந்தன.
வீதிகள்
அழுது கொண்டே
ஹிஜ்ரத்தை ஆரம்பித்தன.
நிலத்தின்
திக்காயங்களைக் கண்டு
வானக் கண்கள்
புகைக்கண்ணீர் சிந்தின.
பகலில்
நட்சத்திரம் தோன்றி -
அதிசயமும்.........
மனித ரக்தத்தால்
'ஹௌளு'வை நிரப்பினர்.
சிலர் -
.மௌத்'தை தொழுதனர்
பள்ளிகள்.
வெள்ளைக்கொடிக்
கதர்களோடு
தெருக்களில்
ரோந்து ராட்டினம் சுற்றிய
காக்கிகளின் முகங்களில்
சந்தோஷம் நெய்திருந்தது.
வீடுகளும் கடைகளும்
கொள்ளையோடு
'மஸாபாஹ்' செய்தன.
மீரட்டை
ஐ. நா. துகிலுரிந்தது.
கிழக்கை
'லங்காபுவத்' துயில்படுத்தியது
விண்ணப்பிக்காமலே
வேலை கிடைத்தது
அகதியாய்!

கலைச் சிற்பியின்,
கபூரடிப் பிரார்த்தனைகள்!

நில்லுங்கள்
இந்த
மைய்யத்துப்பிட்டிகளைப்
பாருங்கள்
இங்கேதான் நமது
இஸ்லாமியத் தோழர்கள்
கபூரடங்கியுள்ளனர்
முன்கர் நகீரின்
விசாரணைகளில்!
இவர்கள் -
இறை இல்லமொன்றில்
புனித மரணமடைந்தவர்கள்
நபிகளின் ஸஹாபாக்கள்
போன்றவர்கள்!

கறுப்பு வீதிகளில்
நெருப்பைக் கக்கும்
வேதாளர்களுக்கு
இந்த
சந்நிதானத்துச் சங்கதிகள்
தெரியாது
தெரியவும் கூடாது

இவர்களின்
தலைமாட்டிலிருந்து
பிரார்த்தியுங்கள்
இஸ்லாமியன் ஒன்றுபடட்டும்
மறந்து விடாதீர்கள்
இவர்களின்
கபூருகளின் மேல்
நாம் அன்று நாட்டியது
விடுதலைக் கொடி என்பதை.

என். ஏ. தீரனின்

From Sri lanka to India by Air Mail

---

17 - 08 - 1988
அதிரமலைக் கேம்ப்.

முகேஜி!
நமஸ்தே!

நீ அனுபவிக்கவில்லை
இவைகளை,
நேற்றும்
புதுச்சட்டைக்காரர்
பாணியிலேயே
ஊர்வலிக்கையில்
நீ கண்டிராத
'உயரப் பறக்கும் வெடி!'

ஐடென்டிகார்ட்பார்ப்பதிலும்
(மொழி புரியாவிடினும்)
தடவிப் பார்ப்பதிலும்
மேஜருக்காக
ஷொப்பிங் போவதிலும்
'பெருமளவு ஆயுதங்கள்'
கைப் பற்றுவதிலும்

எல்லாமே
அவர்களைப் போலவேதான்
ஒன்றைத் தவிர -
,நம மொகத்த?' க்குப்
பதிலாக மட்டும்
'நாம் க்யா?'

முகேஜி!
நீ அமைதியற்ற
எல்லையைக் காப்பதால்
உன் மனதில் அமைதி.
இங்கு, நாம்
அமைதியைத் தவிர
எல்லாவற்றையும் காப்பதால்
என் மனதில் அமைதியில்லை,

மக்களுக்கிடையில்
'இவர்களைத்' தேடுவது
அத்துணை எளிதல்ல
இதுவரை
417 பேரும்
45 ஆடுகளும்
தேடியிருந்தனர்.

முகேஜி!
என் உயிலாக -
நான் விட்டு வந்த
பெட்டியில் உள்ள
'சத்யசோதனை'வை நீ எடு.
358ம் பக்கமுள்ள
என் காதலி
ஜரினு கர்தாரின்'
போட்டோவை
,அவளுக்கே அனுப்பி விடு.
ஆஷா ஸத்தார்ஜியையும்
கேட்டதாகச் சொல்.

வந்தே மாதரம்

நண்பன்
சசீந்தர் ராஹவ்.

---

'தோட்டாக் கோஷம்' கவிதை அனுப்பிய
கவிஞர் மற்றொரு பிரதியுடன் உடன் தொடர்பு கொள்க.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org